# தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்

த.த.செ.ச

1946 முதல்

**தலைமைச் செயலகம், சென்னை-600 009.**

தொலைபேசி : 044-2566 5200 நீட்சி : 5200

**வெங்கடேசன். கு**
தலைவர்
94445 83809

**ஹரிசங்கர். சு**
செயலாளர்
98404 25028

**லெனின். இரா**
இணைச் செயலாளர் (பொது)
95008 55503

**ஜீவன். அ**
இணைச் செயலாளர் [வி (ம) ப]
98846 96619

**பிரபா. சே**
பொருளாளர்
94448 76761


14.09.2023

பத்திரிக்கைச் செய்தி

**தேர்தல் கால வாக்குறுதியான மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும்**

**காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பினை வழங்கிட வலியுறுத்தியும்**

**மனிதவள மேலாண்மைத் துறையின் பணியாளர் விரோத நடவடிக்கைகளை கைவிட வலியுறுத்தியும்**

**தலைமைச் செயலகப் பணியாளர்களின் பணி சார்ந்து சங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தியும்**

**தமிழக அரசின் கவனத்தினை ஈர்க்கும் வகையில்**

**20.09.2023 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உணவு இடைவேளை–கவன ஈர்ப்பு கோரிக்கை முழக்கம்**

தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் கடந்த ஓராண்டாக அரசுத் துறைச் செயலாளர்களிடம் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இதில் பெரும்பாலான கோரிக்கைகள் மனிதவள மேலாண்மைத் துறைச் செயலாளரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும் கொரோனா கடுந்தொற்றினைக் காரணம் காட்டி, ஒன்றிய அரசிற்கு இணையான அகவிலைப்படியானது மூன்று தவணைகள் மறுக்கப்பட்டுள்ளது. பின்னர், அரசிற்கு தொடர்ச்சியாக வலியுறுத்தியதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.7.2023 முதல் ஒன்றிய அரசிற்கு இணையான அகவிலைப்படியினை உடனுக்குடன் வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.

தேர்தல் கால வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் என்பது குறித்து அரசு எந்த முடிவினையும் அறிவிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை) அவர்கள் கடந்த 22.07.2023 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு, பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக திரு. சோமநாதன் தலைமையிலான ஒன்றிய அரசின் கமிட்டி மற்றும் ஆந்திர மாநில அரசின் முடிவுகள் ஆகியவற்றை கூர்ந்தாய்வு செய்து மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, முடிவெடுப்போம் என கூறினார். இதற்கு தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பாக அதிருப்தியினை வெளியிட்ட பிறகு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்னர் தெரிவித்தார். இதன் மீதான அரசின் பரிசீலனை எப்போது நிறைவு பெறும் என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக உள்ளது.

மேலும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்ட சரண் விடுப்பு பணப்பயனானது, முந்தைய ஆட்சியாளர்களால் ஓராண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வழங்க வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்தும், இதுநாள்வரை சரண் விடுப்பு பணப்பயன் என்பது குறித்து எந்தவித சலனமும் அரசுத் தரப்பில் இல்லாமல் உள்ளது.

இதைப்போல தமிழகத்தில் அரசுப் பணியில் 4.50 இலட்சம் காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில், தற்போது பணியாற்றும் பணியாளர்களின் பணிச்சுமை என்பது பன்மடங்கு பெருகியுள்ள நிலையில், அவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஏட்டளவிலேயே உள்ளது. இதனால், தலைமைச் செயலகத்தில் பணியாளர்கள் கடும் பணிச்சுமைக்கு ஆளாவதோடு, பணி நேரம் முடிந்தும் பணியாற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவையெல்லாம் தமிழகத்திலுள்ள அரசுப் பணியாளர்களின் பொதுவான கோரிக்கைகள், தலைமைச் செயலகத்திற்கான பிரத்தியேகக் கோரிக்கைகள் மீதான, அரசின் நடவடிக்கைகள் ஏதும் பணியாளர்களின் நலனைப் பாதுகாப்பதாக இல்லை.

❖ முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதன்முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பில் இருந்தபோது, நடைமுறைப்படுத்தப்பட்டு, பின்னாளில் விரிவுபடுத்தப்பட்ட சார்புச் செயலாளர் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கான கட்டாய மாவட்டப் பயிற்சியினை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மனிதவள மேலாண்மைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

❖ பணிமூப்பு தொடர்பான வழக்கில் கடந்த 18-04-2023 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையில், முதல்நிலை பதவி உயர்வில் கடைபிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் வகுக்கப்பட்ட பிறகும், இவ்வழக்குத் தொடர்பாக உச்சநீதிமன்ற அவமதிப்பு தொடர்பான விசாரணையினைக் குறிப்பிட்டு, தலைமைச் செயலகப் பணியில் பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர், நேர்முக உதவியாளர், முதுநிலை நேர்முக எழுத்தர், முதுநிலைத் தட்டச்சர் மற்றும் உதவியாளர் போன்ற நிலைகளிலுள்ள காலிப் பணியிடங்களுக்கு முழுத் தகுதி படைத்த பணியாளர்களுக்கு ஓராண்டிற்கும் மேலாக பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளது.

❖ தலைமைச் செயலகப் பணியிலிருந்து உதவி தொழிலாளர் ஆய்வாளர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வருவாய் ஆய்வாளர் போன்ற பணியிடங்களில் மாற்றுப் பணியில் பணியாற்றிவிட்டு, தலைமைச் செயலகப் பணிக்குத் திரும்புவோருக்கு, அந்தக் காலத்தினை தேர்வு நிலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என வைக்கப்பட்ட கோரிக்கை கேட்பாடற்றுக் கிடக்கிறது.

❖ திறந்தநிலைப் பல்கலைக் கழகங்களின் மூலமாக பட்ட / பட்டட மேற்படிப்பு பெற்று, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் உதவி பிரிவு அலுவலர்களுக்கான தேர்ந்தோர்ப் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டு, அரசாணை 107ன் அடிப்படையில், உதவி பிரிவு அலுவலர் நிலையில் தற்போது 13 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றும் பணியாளர்களுக்கு தேர்வு நிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் நிலுவையில் உள்ளது.

❖ தற்போது உதவி பிரிவு அலுவலர்களாகப் பணியாற்றுவோருக்கு பிரிவு அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு 15 ஆண்டுகளுக்கு மேலாகும் நிலையில், ஏற்கனவே இருந்த 100 தற்சார்பற்ற பிரிவு அலுவலர் (SONI-Section Officer Non Independent) பணியிடங்களை மீண்டும் கொண்டு வர வேண்டும்.

❖ 10 ஆண்டுகளுக்கு மேலாக பதிவேடு எழுத்தர் நிலையில் இருந்தவர்களுக்கு காலிப் பணியிடங்கள் இருந்தும் பதிவேடு உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் நிலுவையில் உள்ளது.

- தலைமைச் செயலகத்தில் உதவியாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு தற்போதுள்ள விகிதாச்சாரத்தினை மாற்றி அமைப்பது குறித்து எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் உள்ளது.
- அனைத்து நிலைப் பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பட்டியலை அப்பணியிடங்களுக்கான அறுதியிட்ட நாளில் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
- அனைத்துத் துறைகளிலும் செயலாளர் நிலையில் பணியாளர் குறை தீர்ப்புக் கூட்டங்களை ஆறு மாத கால இடைவெளியில் நடத்த வேண்டும்.
- நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பதவி உயர்வில் தனி ஒதுக்கீடு குறித்த அரசாணை வெளியிடப்படாமல் உள்ளது.
- சைதாப்பேட்டை–தாடண்டர் நகரில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் புதியதாகக் கட்டப்பட்டு, பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ள வாடகைக் குடியிருப்புகளில் 25 விழுக்காடு ஒதுக்கீடுகளை தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யுமாறு வைத்த கோரிக்கையின் நிலைமை இதுநாள் வரை தெரியவில்லை.
- உதவி பிரிவு அலுவலர், நேர்முக உதவியாளர், உதவியாளர், முதுநிலை நேர்முக எழுத்தர் மற்றும் முதுநிலை தட்டச்சர் ஆகிய 5 பணியிடங்களுக்கும் மனித வள மேலாண்மைத் துறையானது ஒரே அலுவல் சாரா குறிப்பில் பணியாளர் விவரங்களைக் கோர வேண்டும் என்றும் அனைத்துப் பணியிடங்களுக்கும் தேர்ந்தோர் பட்டியல்கள் அந்தப் பணியிடத்திற்கான அறுதியிட்ட நாளியில் வெளியிடப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் சங்கத்தின் சார்பாக நிர்வாக நடைமுறை சீர்திருத்தம் தொடர்பான கோரிக்கைக்கூட ஏற்கப்படாமல் உள்ளது.

தலைமைச் செயலகப் பணியாளர்கள் தங்களது நியாயமான உரிமைகள் அரசால் நிறைவேற்றப்படாத சூழ்நிலையிலும் மனிதவள மேலாண்மைத் துறையின் பணியாளர் விரோதப் போக்கினாலும், கடும் அதிருப்தியில் உள்ளனர். இச்சூழலில், இன்று சங்கத்தின் செயற்குழுக் கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்கத்தின் சார்பாக வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி எதிர்வரும் 20.09.2023 புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தமிழக அரசின் கவனத்தினை ஈர்த்திடும் வகையில் உணவு இடைவேளை–கவன ஈர்ப்பு கோரிக்கை முழக்கம் நடத்துவது என ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

14/9/23
செயலாளர்

14/9/23
தலைவர்